REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

7 குழந்தைகளின் தாய்: ஓட்டப் பந்தயத்தில் முதற் பரிசு பெற்றூர்

சாங்லி, ஜன. 5—

சென்ற வாரம் மிராஜ் என்னும் நகரில் மகாராஷ்டிரப் பெண்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் எட்டு வயதுள்ள பெண்கள் முதல் 45 வயதுள்ள பெண்கள்வரை சுமார்800 பேர்களுக்குமேல் கலந்துகொண்டனர்.

இப்போட்டிகளில் ஏழு குழந்தைகளுக்குத் தாயாரான திருமதி பிரபாவதி கார்மார்கர் என்பவர் மூன்று முதற் பரிசுகளைப் பெற்றிருக்கிருர். இப்பரிசுகளில் ஒன்று, ஓட்டப்பந்தயம் ஒன்றில் கிடைத்ததாகும்.

மலர் 2] சென்னை: மார்கழி 23உ வெள்ளி (7—1—55) ★ ★ வெளியூர்: மார்கழி 24உ சனி (8—1—55) [இதழ் 178

ஆச்சாரி துடுக்கிற்கு ஆணித்தரமான பதில்

"புதுச்சேரி மாநிலம்"

முன்னுள் பிரெஞ்சிந்தியப் பகுதிகளான புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் ஆகிய நிலப்பரப்புகள் அனைத்தும் இனிமேல் 'புதுச்சேரி மாநிலம்' என்று அழைக்கப்படும்.

இந்திய சர்க்காரின் வெளி விவகார இலாகாவினர் இப்பெயர் மாற்றம் பற்றி உத்திரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கின்றனர்.

கணவருக்கு எதிராக மனைவியர் போட்டி!

அண்மையில் நடைபெறவிருக்கும் ஆந்திர சட்டசபை பொதுத் தேர்தலுக்கு இரண்டு பெண்கள், தங்கள் கணவர்களையே எதிர்த்துப் போட்டியிடுகின்றனர்!

கடப்பை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னுள் அமைச்சரும், காங்கிரஸ் அபேட்சகருமான கோட்டி ரெட்டியை எதிர்த்து அவரது மனைவியரான திருமதி ராம சுப்பம்மா சுயேச்சையாகவும், மற்ருெரு தொகுதியில் கிருஷிக் லோக் கட்சித் தலைவர் லட்சண்ணவை எதிர்த்து, அவரது மனைவியரான திருமதி ஜி. யசோதா தேவி சுயேச்சையாகவும் நின்று போட்டியிட தங்கள் அபேட்சை மனுக்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

இறக்குமதி இரும்பை நம்பி அல்லவா ஜப்பான் தொழில் நடைபெறுகிறது?

சிந்திரி உரத் தொழில் மூலப் பொருளுக்கு ராஜபுதனத்தைத்தானே நம்பி இருக்கிறது?

சேலத்தின் உருக்குத் தொழில் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும்

சேலம் மக்கள் சபை உறுப்பினர் கண்டனமும்—கருத்துரையும்

"ஒரு தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருட்கள் அனைத்தும், ஒரு குறிப்பிட்ட பகுதியிலேயே கிடைக்க வேண்டுமென எதிர்பார்த்தல் முடியாது. ஜப்பானில் இயங்கி வரும் இரும்புருக்குத் தொழிலுக்கு, பிற நாடுகளிலிருந்து பண்படுத்தப்படாத இரும்பு இறக்குமதி செய்யப்படுகிறது. உலகத்தில் உள்ள பெரும் உருக்குச்சாலைகளில் ஒன்ருகக் கருதப்படும் 'பிட்ஸ்பர்க்' உருக்குத் தொழிற்சாலை, வெனிசுலா இரும்பையே நம்பிக்கிடக்கிறது. இந்தியாவில்கூட, சிந்திரியில் இயங்கிவரும் உரத் தொழிற்சாலை, தனக்கு இன்றியமையாத் தேவையாக உள்ள மூலப் பொருளான (Gypsum) சிலாசத்துக்கு, இர்ராஜபுதனத்தையே எதிர் பார்த்துக்கொண்டு இருக்கிறது."

—*இவ்வாறு, இந்திய அரசாங்கத்தின் வர்த்தக, தொழில் மந்திரி கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள், சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை நிறுவுவது குறித்துக் கூறிய வாய்த்துடுக்குக்கு ஆணித்தரமாகப் பதில் தந்துள்ளார், மக்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினரான எஸ். வி. இராமசாமி அவர்கள்.*

"நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு தனது எல்லைக்குள் உள்ள சாந்தூரில் ஒரு உருக்குத் தொழிற்சாலையைத் துவக்குவது குறித்து மைசூர் நினைக்கிறபொழுது, நூறு மைலுக்கும் குறைவாக உள்ள நெய்வேலியைக் குறித்து சேலம் கோருவது சிறந்த கோரிக்கையேயாகும்,"

என்று, தோழர் இராமசாமி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதுவுமன்றி, சேலத்திலும், நெய்வேலியிலும் ஊருக்கு ஒன்ருக இரண்டு உருக்குத் தொழிற்சாலைகளை நிறுவ முடியும் என்றும், அதிலுள்ள செலவு சிக்கனத்தையும் அவர் விளக்கி உள்ளார்.

அதாவது, "சேலத்தில் ஒன்றும், நெய்வேலியில் ஒன்றும் ஆக இரண்டு உருக்குத் தொழிற்சாலைகளை, சென்னை மாநிலத்தில் நிறுவலாம். நெய்வேலியிலிருந்து சேலத்திற்கு பழுப்பு நிலக்கரியைக் கொண்டுவரும் இரயில் வண்டிகள், சேலத்திலுள்ள பண்படாத இரும்பைத் திரும்ப நெய்வேலிக்கு ஏற்றிச் செல்லலாம். இரண்டு இடங்களுக்கும் தொடர்பு கொண்டிருக்கும் இரயில் போக்கு வரத்து வசதியை, இதன் மூலம் சிக்கனமாகப் பயன்படுத்துவது சாத்தியமாகும்" என அவர் அறிவித்துள்ளார்.

'சேலத்திலா இரும்புத் தொழிற்சாலை? அது மனக்கோட்டை! நிலக்கரிக்கு எங்கே போவது?' என முதல் முறை கேலியாகப் பேசியும், அதற்கு விளக்கமளிக்கும் வகையில், 'ஜாம்ஷெட்பூர், பரன்பூர் போன்று சேலத்திலும் உருக்குத் தொழிற்சாலை நிறுவலாம் என கனவு காண்பது கூடாது' என வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சினுர், அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் என்பதை வாசகர்கள் அறிந்துள்ளனர். அவ்வாய்த் துடுக்கிற்குத்தான், தோழர் இராமசாமி அவர்கள் சுடச்சுட மேற்கண்ட பதிலைக் கொடுத்துள்ளார்.

"உடல் உழைப்புக்கு நம் சமூகம் மதிப்பளிப்பது இல்லை!"

"இது ஜாதி வெறி விளைவித்த கொடுமையின் எதிரொலியாகும்"

ஆச்சாரியா வினோபா பாவே கருத்து

"உடல் உழைப்புக்கு மதிப்புத் தராத காரணத்தால் ரோமானிய சாம்ராஜ்யம் விழ்ந்து போயிற்று; இந்தியாவும் இப்போது இத்தவறைச் செய்துவருகிறது,"

என்று, ஆச்சாரியா வினோபா பாவே மிஜியாவில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"*உடல் உழைப்பு இல்லாமல், உணவு உட்கொள்வது கிடையாது என்று மக்கள் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்,*" *என்று அவர் கேட்டுக்கொண்டார்.*

"*அரசியல்வாதி, வழக்கறிஞர், எழுத்தாளர், ஆசிரியர் எவராக இருந்தாலும், நாள் தோறும் குறைந்தது அரைமணி நேரமாவது உடல் உழைப்புக்கான வேலையைச் செய்வது என்பதை மேற்கொள்ள வேண்டும்; உடல் உழைப்புக்கு அளிக்கப்படும் மதிப்பு, பூமிதான இயக்கத்தின் அடிப்படையாகும்,*" *என்றும் அவர் குறிப்பிட்டார்.*

"நமது சமூகத்தில் உடல் உழைப்புக்கு மிகவும் தாழ்ந்த இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது; எவ்வளவு கடினமாக வேலை இருக்கிறதோ அவ்வளவுக்குக் கேவலமாக அந்த மனிதன் கருதப்படுகிருன்," என்று அவர் வருந்தினுர்.

"நகரசுத்தித் தொழிலாளர்கள் இல்லாமல் ஒரு நாள் கூட நகரங்கள் இருக்க முடியாது என்பதை ஒவ்வொருவரும் அறிவார்கள்; என்ருலும்கூட, அத்தொழிலாளர்கள்தான் மிகவும் கீழ்த்தரமானவர்களாகக் கருதப்படுகிருர்கள். இவற்றின் விளைவு, நமது நாட்டில் உடல் உழைப்புக்கு மதிப்பு இல்லாத நிலைமையை உண்டுபண்ணிவிட்டது,"

என்று அவர் மேலும் எடுத்துச் சொன்னுர்.

"நாட்டிலே இழிவை உண்டுபண்ணிய ஜாதி முறையின் எதிரொலி இது; இந்தக் கேவலமான நிலைமை, ஆங்கிலேயர்கள் அளித்த கல்வி முறையினுல் மேலும் மோசமாக்கப்பட்டது; அக்கல்வி முறையில் உடல் உழைப்பு இடம்பெறவே இல்லை; ஏனென்ருல், நிர்வாகத்தை நடத்த வேலைக்காரர்கள் தேவை என்று பிரிட்டிஷார் விரும்பினுர்கள்,"

என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இறுதியாக அவர் பேசுகையில், நம் நாட்டில் உடல் உழைப்புக்கு மதிப்பளிக்கும் உணர்ச்சியை வளர்க்கக்கூடிய கல்வி முறை வேண்டுமென்று குறிப்பிட்டார்.

உடன்கட்டை ஏற முயற்சி

போலீசார் தடுத்தனர்

சிர்கார், ஜன. 7—

தனது கணவனுடன் உடன் கட்டை ஏறவேண்டுமென்று 'சிதை'யில் ஏறிய பெண் ஒருவரைப் போலீசார் தடுத்து நிறுத்தினுர்கள்.

அப்பெண்ணை போலீசார் காவலில் வைத்துள்ளனர்.

பன்வாரிபாய் என்னும் பெயருடைய பெண்மணி உடன்கட்டை ஏறுவதைக்காண ஏராளமான மக்கள் கூடி நின்ருர்களாம்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஜோத்பூரில் ஒரு பெண் உடன் கட்டை ஏறி மாண்டு போனது பொது மக்களுக்கு நினைவில் இருக்கலாம்.

மத்திய சர்க்காரில் புதிய இலாகா

அன்சாமேத்தா அம்மையார் அமைச்சராகலாம்?

பரோடா—

பரோடா பல்கலைக் கழகத் துணைத் தலைவரான திருமதி அன்சா மேத்தா, மத்திய சர்க்கார் புதிதாக ஏற்படுத்த இருக்கும் சமூக சேவை இலாகாவின் அமைச்சராக நியமிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது. இந்த இலாகா வருகிற ஏப்ரல் திங்களிலிருந்தே இயங்க வேண்டுமென நேரு பண்டிதர் விரும்புகிருராம்!

"சிறு நிலப் பகுதியையும் பிரிக்க அனுமதியோம்"

மாநிலப் புனரமைப்பு பற்றி பீகார் காங்கிரஸ் தீர்மானம்

பாட்னு, ஜன. 7—

"மொழி, பொருளாதாரம், இனம் அல்லது இவை போன்ற வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும், பீகாரின் எப்பகுதியையும் பிரித்து, மேற்கு வங்கம் அல்லது ஒரிசாவுடன் சேர்ப்பது கூடாது,"

—என்று, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பீகார் பிரதேச காங்கிரஸ் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

மாநில புனரமைப்புக் குழுவினரிடம் முன்னர் கொடுக்கப்பட்டிருக்கும் அறிக்கையின் கருத்தைத்தான் மேற்கண்ட தீர்மானம் வலியுறுத்துகிறது.

"*மேற்கு வங்கம், ஒரிசா, பீகார் இவைகளின் எல்லையைத் திருத்தி அமைப்பதென்ருல், ஒரிசா, மே. வங்கம் ஆகியவற்றில் உள்ள சில பகுதிகள் பீகாருடன் சேர்க்கப்பட வேண்டும்.*

"*சர்க்காருக்கு இதுபற்றி சிபாரிசுகள் செய்யப்படு முன்னர், பீகாரிலிருந்து பிரிக்கப்பட்டு மே. வங்கம் அல்லது ஒரிசாவுடன் சேர்க்க உத்தேசிக்கப்படும் பகுதிகளில் வாழும் மக்களின் கருத்தையும் அறிவது அவசியமாகும்,*" *என்று பிரதேச காங்கிரஸ் குழு முன்பே வற்புறுத்தியிருக்கிறது.*

யுகோஸ்லாவியா ஜனுதிபதி மார்ஷல் டிட்டோ 6-ந் தேதி இரங்கூன் வந்து சேர்ந்தார். அவருக்கு கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

நினைவிலிருத்துவீர்-கைத்தறி வாரம்-ஜன.7-13!

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை
சென்னை 7—1—1955 வெள்ளி

விரும்பத்தகாதவர் விரட்டப்பட வேண்டும்

விஞ்ஞானம், என்றென்றும் தேக்கமுறாது, நீடித்து வளர்ந்து கொண்டேவரும் மெய்யறிவுக் கலையாகும். அம்மெய்யறிவில், முடிந்த முடிவு அல்லது முடிந்த உண்மை எனக் கூறிடும் வரையறை கிடையாது. குறிப்பிட்ட ஒரு பொருளை ஆராய ஆராய, அதுவரை கண்டறிந்தில்லாத பலப் பல புது விளைவுகள், குறிப்பிட்ட அப்பொருளிலிருந்து வெளிப்பட்டவண்ணம் இருந்துவருகின்றன. அதே குறிப்பிட்ட பொருள் முதன் முறையாக ஆராயப்பட்டபொழுது, அதிலிருந்து கிடைக்கப்பெற்ற அப்பொருளின் இயற்றன்மை, அதே பொருளை, மேலும் தொடர்ந்து நுணுகி ஆராயப்புகும்பொழுது, உறுதி செய்யப்படுவதும் உண்டு. அவ்வாறு உறுதி செய்யப்பட்ட அப்பொருளின் இயற்றன்மைக்கு உடன்படும் நிலையில், அப்பொருளில் மறைந்துள்ள புதிய தன்மை, எளிதில் அனைவராலும் அறியப்படும் வகையில் கண்டறியப்படுவதும் உண்டு. அதற்கு மாறாக, முதலாராய்ச்சியில் அறியப்பட்ட அப்பொருளின் இயற்றன்மை, அதற்கு முழுதும் முரண்படும் வகையில் புதிய தன்மையைக் கொண்டிருப்பதாகக் கண்டறியப்படுவதும் உண்டு. இதனால் தான் விஞ்ஞானத் துறையில் குறிப்பிட்ட பொருளைக் குறித்து, கூறப்படும் உண்மைகளை, முடிந்த நிலையாகக் கூறுவதும் கிடையாது — அம்மாபழிக்கு விஞ்ஞானம் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்வதும் கிடையாது.

ஆனால், மதக் கருத்தோ, நம்பிக்கையினால் கற்பித்துக் கொண்ட ஆதாரமற்ற ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, உலகத்தை ஆராயப் புகுவதாகும். இதற்குப் பெயர், வேறு எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாமேயல்லாது, ஆராய்ச்சி எனக் குறிப்பிடுவது கொஞ்சமும் பொருந்தாது. கற்பனையில் துவங்கி, கற்பனையில் ஆராய்ந்து, கற்பனையில் முடிவுறுவதுதான் மத வழி. தவறான துவக்கம் தவறான முடிவைத்தானே உண்டாக்கும்! மதவழி விஞ்ஞானத் துறை போன்ற ஆராய்ச்சித் துறை அல்லவே அல்ல; அது வெறும் குழப்பம்!

மதநோக்கு, இடுகாட்டிற்கு இழுத்துச் செல்வது; விஞ்ஞான நோக்கு, இன்பபுரிக்குத் தள்ளச் செய்வது. இரண்டு நோக்கினாலும், மனித குலம் பெற்ற நன்மை தீமைகளை, இன்ப துன்பங்களை நாம் காணும் உலகம் காட்டியவண்ணம் உள்ளது. அறியக் கூடியதை அறிய இயலாது இருப்பவன் அறிவிலி; அறிந்ததை, அறியாதவன் போல் இருப்பவன் எத்தன்; அறிந்தும், அதற்கு மாறாகப் பிதற்றித் திரிபவன் கயவன்—வஞ்சகன்—குள்ள நரிக் குணங் கொண்டோன்!

மத வழி, விஞ்ஞான வழி வட துருவம்—தென் துருவம் போன்றுள்ள எதிர்மறைகளாகும். மத வழியில் பற்றும் பாசமும் பயிற்சியும் கொண்டவர்களால் விஞ்ஞானநோக்குப் பெறுவது என்பது பெரும்பாலும் இயலுவதில்லை. ஒருவர் இருவர், இப் பொதுவிதிக்கு விலக்காக இருப்பதும் எதிர்பார்க்கக்கூடியதே. ஆனால், அவர்கள் சொல்லிலும், செயலிலும் அவர்களை அறிந்தும், அறியாமலும் மதவழி துர்வாடை எப்பொழுதாவது வீசத்தான் செய்யும். பாம்பூரக் கல்லும் தேயும்—பாறையைக் கோழியும் சீய்க்கும்!

விஞ்ஞானத் துறையினர், முன்னாள் மதப் பிடிப்பிலிருந்து தங்களை அறவே விடுவித்துக் கொள்ள வேண்டும். அத்தகு பிரிவு நிலையை எய்தாதவர்கள், விஞ்ஞானத் துறையில் நுழைவதைக் காட்டிலும் நுழையாமல் இருப்பது ஆயிரம் மடங்கு மேல். மதப் பிடிப்பில் அறிவை அடகு வைத்திருப்பவர்கள் விஞ்ஞானத் துறையில் குறிக்கிடுவதால், விஞ்ஞானத் துறை பாழ்பட்டுவிடுகிறது. விஞ்ஞானத்துறை, அதுவரை சென்று கொண்டிருந்த பாதையையும் விட்டு தவறிய பாதையில் செல்லும் அபாயமும் ஏற்படுகிறது. இதனால், விஞ்ஞானம் மத ஞானத்தின் இழிந்த இடத்தைப் பெற்று விடுகிறது. எனவே, விஞ்ஞானத்துறையை, மத நோக்குடையோர் அரவணைப்பிலிருந்து விடுவிக்க வேண்டிய கட்டாயமும் இன்றியமையாததாகிறது.

எடுத்துக் காட்டாக ஒன்றைக் குறிப்பிடுவோம்: கல்வி பொதுவென்பது விஞ்ஞானம். வாய்ப்பும் வசதியும் தரப்பட்டால் கல்வி பெறும் திறம் அனைவருக்கும் ஏற்படும் என்பதும் விஞ்ஞானந்தான்.

ஆனால் கல்வித் திறம் குறிப்பிட்ட ஒரு சிலருக்குத்தான் பிறப்புரிமை என்பது மதக் கருத்து. கற்றலும், கேட்டலும், அவைகளை சிந்தித்தலும், ஆராய்தலும், ஒருவர் கல்வித் திறம் பெறுவதற்குப் போதுமானது என விஞ்ஞானம் வலியுறுத்தினால், அவை தேவையென்றாலும் 'ஆண்டவன் கருணைகடாட்சமும் பூர்வ ஜன்மப் ப்ராப்தியும்' இருந்தால் தான் ஒருவர் கல்வித் திறம் பெறுதல் கூடும் எனப் பிடிவாதம் பேசுகிறது மத வழி. இம்மத வழியில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருக்கின்ற திருக்கல்யாண குணம் படைத்தவர்கள் விஞ்ஞானத்துறையில் தலையிடுவதால், விஞ்ஞானத் துறை மாசடைந்துதானே போகும்? மாசடைவதுடன் மட்டுமன்றி, விஞ்ஞானத்திற்கும் மத ஞானத்திற்கும் அடிப்படை வேற்றுமை ஒன்றும் கிடையாது என்ற மயக்க உணர்ச்சிதானே மக்களிடம் பரவ வழி பிறக்கும்?

தாங்கள் தினம் தினம் காணும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளாலும், அவைகளினால் தாங்கள் அனுபவிக்கும் இன்பத்தினாலும், விஞ்ஞானத்தை அறியும் சிறுவிழைவு, நம்மவர்களிடை இப்பொழுதுதான் அரும்பத் தொடங்கியிருக்கிறது. அதை அவ்வரும்பு நிலையிலேயே கருகிவிடச் செய்ய, விஞ்ஞானப் போர்வையில் சில விரும்பத்தகாதவர் உலவிடவும் செய்கின்றனர். எனவே, விஞ்ஞானக் கலையை, அவ்விரும்பத்தகாதவர் கூட்டுறவிலிருந்து மீட்டுக் காப்பாற்ற வேண்டிய கட்டாயம் நல்லறிவாளர் அனைவர்களுக்கும் ஏற்பட்டு இருக்கிறது.

பாராட்டத்தக்க கிராமம்

எல்லோரும் படித்தவர்களாம்!

பாட்னா அருகே உள்ள நாகாலன் கிராமத்தில் உள்ள 1,000 பேர்களில் எல்லோரும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாம்.

இக்கிராமத்தின் பரப்பு 300 சதுர ஏகர் என்று சொல்லப்படுகிறது.

இக்கிராம மக்களிடையே கடந்த 100 ஆண்டு காலமாக வழக்குகள் ஏதும் ஏற்பட்டது கிடையாதாம். ஏற்படும் வழக்குகள் அனைத்தையும் கிராமப் பஞ்சாயத்து மூலமே தீர்த்துக் கொள்கிறார்களாம்.

இங்கே சிறந்த சாலைகளும், சாக்கடைத் திட்டமும் உண்டாம் சர்க்காரின் உதவியுடன் சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது; முதியோர் கல்விச்சாலை ஒன்று கட்டப்படுகிறது. நூல் நிலையம் ஒன்று, கிராமப் பொது மன்றம், கலைக் கழகம் ஆகியவைகள் கூட அங்கே இருக்கின்றனவாம்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் பாட்னா ரோட்டரி கிளப்பினர் இந்தக் கிராமத்தைத் திருத்தி சிறப்பிக்கவேண்டுமென்று தீர்மானித்து இப்படிச் செய்தார்களாம்.

'சமுதாய-பொருளாதார துறைகளில் தீவிர மாற்றம் செய்ய வேண்டும்!'

" இல்லையேல் அரசியல் உரிமை பயனற்றதாகிவிடும் "

குடியரசு துணைத் தலைவரின் குறிக்கோள்

" அரசியல் ஒற்றுமையின்மை, அல்லது தேசிய இணக்கமின்மை, பொருளாதார சுதந்திரமில்லாமை, மாசுற்ற ஒழுக்கக்கேடான நிர்வாகம் ஆகிய மூன்றும், ஒரு நாட்டை வீழ்ச்சியுறச் செய்யும் பெருங்கேடுகளாகும்."

இக்கருத்தை, கோட்டம்பம் அருகில் ஒரு கிராமத்தில் நில நன்கொடை இயக்கக் குழு ஒன்றைத் துவக்கி வைத்தபொழுது, இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார் :—

" தீவிரமான சமுதாய—பொருளாதார மாற்றங்களைத் தோற்றுவிப்பதற்குக் கிடைத்துள்ள அரசியல் சுதந்திரம் பயன்படுத்தப்பட்டால் அல்லாது, அது தனக்குத்தானே பயனற்றதாகிவிடுகிறது மக்களாட்சி நாட்டு மண்ணில் வேரூன்ற வேண்டும்.

" இந்தியாவை ஒன்றாக இணைக்கவும், சுதந்திரம் பெறவும் கையாளப்பட்ட அதே முறையை மேற்கொண்டு, சமுதாய—பொருளாதார புரட்சிகளையும் உருவாக்க முடியும். அதே முறையை அனுசரிப்பதின் மூலம், அரசியல், சமுதாய இயல், பொருளியல் ஆகிய துறைகளில் நமக்குரிய விளைவை அடையக்கூடும் என நான் நம்புகிறேன்."

உண்மையான விழிப்புணர்ச்சியை கிராமத்தில் புகுத்த வேண்டியதின் அவசியத்தைக் குறித்து அவர் குறிப்பிடும்பொழுது, " கூட்டுறவு உணர்வை கிராம மக்களிடையே உருவாக்க வேண்டும். இத்துறையில் கடந்த 50 ஆண்டுகளாக கிராமங்களில் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. பலனோ பெரும் சுன்னம்" எனக் கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது :—

"தேசீய இணைக்கமின்மை, உள் வெடிப் பிரிவுகள், கிராம மக்களிடமிருக்கும் சண்டையிடும் புத்தி, ஆகியவற்றினால் இந்தியாவில் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது. இழிநிலையை எய்தாமலிருக்க வேண்டுமானால், கூட்டுறவு உணர்வையும் ஒருமை ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டுவது இன்றியமையாததாகும்."

ரயில்வே வகுப்புகளுக்குப் புதிய பெயர்

கட்டண மாற்றம் கிடையாது

வருகிற ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இப்போது ரயில்வேக்களில் உள்ள வகுப்புகளின் பெயர்கள் மாற்றியமைக்கப்படும் என்று தெரிகிறது. இப்போது இரண்டாம் வகுப்பு என்று அழைக்கப்படும் வகுப்புக்கு முதல் வகுப்பு என்றும், 'இண்டர் வகுப்பு,' இரண்டாவது வகுப்பு என்றும் பெயரிடப்படுமாம். மூன்றாவது வகுப்பில் மாற்றம் எதுவுமில்லையாம். இவை தவிர, 'ஏர் கண்டிஷன்' பெட்டிகள் தனிப்பட இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இப்போது, வகுப்புகளுக்குத்தான் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர, கட்டண மாறுதல்கள் எதுவுமில்லை. இப்போதைய இரண்டாம் வகுப்புக் கட்டணம், முதல் வகுப்புக்கும், 'இண்டர்' வகுப்புக் கட்டணம் இரண்டாம் வகுப்புக்கும் வசூலிக்கப்படுமாம். பிரயாணிகளுக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகளிலும் மேலும் மாற்றம் எதுவும் இருக்காதாம்.

இந்திய இரயில்வே பிரயாணிகள் போக்குவரத்துக்களில், சென்ற ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் முடிய 8 திங்களில், 1953-ம் ஆண்டில் கிடைத்ததை விட 1 கோடி 53 லட்சம் ரூபாய் அதிக வருமானம் கிடைத்துள்ளதென்றும், சாமான்கள் போக்குவரத்தில் 2 கோடி 68 லட்சம் ரூபாய் அதிக வருமானம் கிடைத்ததென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1954 ஏப்ரல் — அக்டோபர் ஆகிய 6 மாதங்களுக்கிடையில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு 148 புதிய இரயில் எஞ்சின்களும், 4,353 பி. ஜி. வாகன்களும், 3,700 எம். ஜி வாகன்களும் வந்தன என்றும், இவ்வாகன்கள் எல்

(4-ம் பக்கம் பார்க்க)

"ஆங்கிலத்தை வெறுப்பதால் தீமைதான் விளையும்"

இந்தி மொழி ஆதரவாளருக்கு பண்டித நேரு எச்சரிக்கை

"செடியில் உள்ள மலர் தன்னை அழகுபடுத்திக்கொள்ள யாருடைய உதவியையும் எதிர்பார்ப்பது கிடையாது; மொட்டிலிருந்து மலராகி அழகுற காட்சியளிக்க அதனிடமே போதிய திறமை இருக்கிறது; அதுபோல், ஒரு மொழியின் விதியை நிர்ணயிப்பது அந்த மொழியேதான்; மக்களிடையே வேரூன்றும் அளவுக்கு ஒரு மொழியிடம் வலிமையில்லை என்றால், அந்த மொழியே மேன்மையுறாது."

—என்று, பண்டித நேரு, ஆமதாபாத்திலுள்ள குஜராத் வித்தியாபீடத்தில் காந்தி நூல் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மக்களிடையே இப்போது ஆக்க வேலைக்கான மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறதென்றும், அது எல்லாத் துறையிலும் காணப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மொழி அபிவிருத்தியிலும் இந்த மனப்பான்மை காணப்படுகிறது என்றும், ஆகவே, மொழிகள் பற்றிய சர்ச்சை பயனற்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

"வங்க மொழி மிகவும் வலிமை பெற்றது; அதன் வளத்தை தாகூர் போன்ற கவிஞர்கள் சிறப்படையச் செய்தனர். இப்படிப்பட்ட சிறந்த மொழியைப் பேசும் மக்களிடையே வேறொரு மொழி ஆதிக்கம் செலுத்தும் என்பது எப்படி என்று எனக்குப் புரியவில்லை," என்று பண்டித நேரு குறிப்பிட்டார்.

"இந்தியைப் பரப்ப விரும்புவோர் இந்தியின் மீது அன்பு வைப்பதில் தவறில்லை; ஆனால் அம்மொழியின் மீது மக்கள் அன்பு காட்டி, அதனை ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது அடிப்படை உண்மையாகும்."

"பஞ்சாபிலே உருதுமொழியாரும், குர்முகி மொழி பேசுவோரும் சண்டையிட்டுக் கொள்கின்றனர். டில்லியில் உருதுமொழியின் எதிரிகளான இந்துமகா சபையினரே உருது மொழியில் பத்திரிகை நடத்துகின்றனர்; இப்படியிருக்கும் மக்கள், தாங்கள் விரும்பும் மொழியில் பேசவும், எழுதவும் இயலாது தடுக்கப்படுவார்கள் என்பது எவ்வாறு சாத்தியமென எனக்குப் புரியவில்லை. பஞ்சாபில் உருது அன்பர்களுக்கும், குர்முகி அன்பர்களுக்கும் இடையே நடைபெறும் சண்டை ஒரு நல்ல வேடிக்கையாகவே இருக்கிறது" என்று பண்டித நேரு குறிப்பிட்டார்.

அடுத்து அவர் ஆங்கிலம் பற்றிப் பேசுகையில், ஆங்கிலத்தின்மீது வளர்ந்து வரும் வெறுப்பைக் கண்டித்தார்.

" ஆங்கிலம், தேசிய மொழிக்கு மாற்று மொழியாக இருக்க முடியாதுதான்; ஆனால், அதே நேரத்தில், ஆங்கிலத்திற்கு அகில உலகில் இருக்கும் முக்கியத்துவத்தை மட்டுமின்றி, நம் சொந்த நலனையும் கவனிக்க வேண்டும். நாம் வெளிநாட்டு மொழிகளைக் கற்பதைக் கைவிட்டால், முன்னேற்றப் பாதையில் மிகவும் பின்தங்கியவர்களாவோம்; ஆங்கிலம் மட்டுமல்ல—ஜெர்மன், பிரெஞ்சு, ரஷிய, சீன மொழிகளைக் கற்பதற்கும் நாம் ஊக்கமளிக்க வேண்டும். இம்மொழிகளின் வாயிலாகத்தான், நாம் உலகத்தை இன்னும் நன்றாக அறிய முடியும்," என்றும் நேரு குறிப்பிட்டார்.

மக்களிடையே விஞ்ஞான உணர்வு பரவ வேண்டும்

நாடு முன்னேற அது பயன் தரும் என்கிறார் பண்டித நேரு

நாட்டு மக்களிடையே விஞ்ஞான உணர்வு ஏற்படுமாறு தொழிலாளர்கள் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றும், விஞ்ஞான ஊழியர்கள் இந்த உணர்வை நாடு முழுமையும் பரப்பவேண்டுமென்றும் பண்டித நேரு கேட்டுக் கொண்டார்.

பரோடாவில் நடைபெற்ற இந்திய விஞ்ஞான ஊழியர்கள் கழகத்தில் பேசுகையில் பண்டித நேரு இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விஞ்ஞான உணர்வு நாட்டின் முன்னேற்றத்தைத் தடுக்கும் தீமைகளைப் போக்க உதவுமென்றும், அவர் மேலும் எடுத்துக் காட்டினார்.

மக்களிடை நல்ல உள்ளப்பாங்கை ஏற்படுத்துவதில் விஞ்ஞான ஊழியர்கள் சிறந்த பங்கு கொள்ள இயலும் என்று நேரு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது :—

"இப்போது இந்தியாவின் முக்கியமான தேவை—பணத்தைவிட அதிகமான தேவை-பயிற்சி பெற்ற ஊழியர்கள்தான்.

தேசீயத் திட்டங்களை நிறைவேற்ற நாட்டிற்கு லட்சக்கணக்கான பயிற்சி பெற்ற ஊழியர்கள் தேவைப் படுகிறார்கள். அதே நேரத்தில் பயிற்சி பெற்ற பலர் வேலையின்றி இருக்கின்றனர். நம்முடைய சமூக அமைப்பில் ஏதோ தவறு இருக்கிறது என்பதைத் தான் இது எடுத்துக் காட்டுகிறது.

ஒரே நேரத்தில் பயிற்சி பெற்றவர்கள் தேவைப்படுவதும், அவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் காணப்படுவதுமான விசித்திர நிலைகள் நம் சமூகத்தில் காணப்படாதவாறு சமூகத்தை நாம் திருத்தியமைக்க வேண்டும்

நாட்டின்முன்னுள்ள புனரமைப்புத் திட்டங்களை நிறைவேற்ற விஞ்ஞானத் தொழில் நிபுணர்கள் தங்கள் பங்கைச் செலுத்த வேண்டும். மற்ற நாடுகளில் காணப்படும் சமூக, பொருளாதார முன்னேற்றத்தை அடைந்து தன்னை உயர்த்திக் கொள்ளாவிட்டால் இந்தியாவின் நிலை மிகவும் தொல்லைக்குள்ளாகும்."

இந்தியா மிகவும் ஏழை நாடு என்றும், அனைவரும் கடினமாக உழைக்கவேண்டும் என்றும் நேரு குறிப்பிட்டுவிட்டு, "இந்தியாவில், சமூகத்தின் ஒவ்வொரு பகுதியினரும், தங்களது நலனுக்காக மட்டுமே உழைத்தால், நாடு முழுமையும் முன்னேறுவது இயலாத காரியம்," என்று கூறினார்.

ரஷ்யர்கள் அமைக்கும் இரும்புத் தொழிற்சாலை

நிபுணர்கள் அறிக்கை தரப்பட்டது

இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்த ரஷிய நிபுணர்கள், இந்தியாவில் 10 இலட்சம் டன் இரும்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடியுமென்று இந்திய சர்க்காருக்கு தந்திருக்கும் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இரயில் தண்டவாளங்களையும், இரயில்வேயிக்குத் தேவையான இதர சாமான்களையும் இந்தத் தொழிற்சாலையில் தயார் செய்ய ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

இத்தொழிற்சாலைக்கு ரஷியா எவ்விதத்தில் தொழில் நுணுக்க உதவியும், இயந்திர உதவியும் அளிப்பது என்பது பற்றி இன்னும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றவண்ணம் இருக்கிறதாம். இப்பொருள்களின் விலையை நிர்ணயிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகவும், ரஷியாவில் பொருள்கள் உற்பத்தியின் அளவைப் பொறுத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறதென்றும் கருதப்படுகிறது.

இந்தியாவில் இந்த முறை இல்லையாதலால், ரஷியா உதவும் இயந்திரங்களின் விலையை நிர்ணயிப்பது கடினமாக இருக்கிறதாம்.

இப்பிரச்சினையில் ஒரு இறுதி முடிவு ஏற்படும் முன்னர், இந்திய நிபுணர்கள் குழு ஒன்று ரஷியா சென்று, ரஷியா அமைக்க இருக்கும் தொழிற்சாலையின் தன்மை எப்படியிருக்கும் என்பதை நேரில் கண்டறிவார்கள் என்று தெரிகிறது.

'போர் பிரகடனம்!'

கிழக்கு இந்தோனேஷியாவிலுள்ள மெலூகஸ் தீவுகள் சிலவற்றின் மீது, இந்தோனேஷிய சர்க்கார் 'போர் பிரகடனம்' ஒன்றைப் பிறப்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

தீர்ப்பு ஒத்திவைப்பு

எர்ணகுளம், ஜன. 5—

திரு-கொச்சியில் நடைபெற்ற திரு-தமிழக இணைப்புப் போராட்டம் காரணமாக, தற்போது சிறை வைக்கப்பட்டிருக்கும் தி. த. நா. காங்கிரசைச் சேர்ந்த 6 எம். எல். ஏ.-க்கள் சார்பில் ஜன. 25-ந் தேதியன்று நடைபெறவிருக்கும் திரு-கொச்சி சட்டசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனுமதிக்கக் கோரி சமர்ப்பிக்கப்பட்ட 'ரிட்' மனு மீது, திரு-கொச்சி மாநில உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறுவதை ஒத்திவைத்திருக்கிறது.

கைத்தறித் துணி விற்பனை

தூத்துக்குடியில் தி. மு. கழகத் தோழர்கள், ஜனவரி 7-ந் தேதி முதல் 13-ந் தேதிவரை, தெருத் தெருவாகச் சென்று கைத்தறி ஆடைகளை விற்பனை செய்வர்.

* * *

9—1—55 காலை 9 மணிக்கு சென்னை 44-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையில் தோழர் பி. எம். மதியழகன் தலைமையில் கைத்தறியாளர் ஆதரவு வாரம் நடைபெறும். தோழர்கள் நி. சமூகன், எம். இராசு, மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றுவர். அன்று முழுமையும் கழகத் தோழர்கள், தெருத் தெருவாகச் சென்று கைத்தறி ஆடைகளை விற்பனை செய்வர்.

* * *

ஆலந்தூர் (பறங்கிமலை) தி. மு கழகத் தோழர்கள், 9—1—55 முதல் 13—1—55 வரை, தினந்தோறும் காலையிலும், மாலையிலும் கைத்தறி துணிகளை விற்பனை செய்வர்.

* * *

9—1—55 காலை 8 மணிக்கு, எண் 1, குப்பையர் தெருவில் இருக்கும் சென்னை 8-வது வட்ட தி. மு. கழகப் பணி மனையிலிருந்து கழகத் தோழர்கள் கைத்தறித் துணிகளை, 7, 8-வது வட்டங்களிலுள்ள வீதிகளின் வழியாக விற்பனை செய்துகொண்டு வருவர்.

* * *

பொங்கல் திருநாளுக்கு முன்னர், கைத்தறிச் சேலைகள், வேட்டிகள், துண்டுகளை எடுத்துக் கொண்டு, பெங்களூர் சிட்டி கில்லார் ரோடு மக்கள் முன்னேற்றக் கழகத் தோழர்கள் பெங்களூர் நகரின் பல பகுதிகளிலும் சென்று விற்பனை செய்வார்கள்.

சீக்கிய மதச் சபைக் - கூட்டத்தில் குழப்பம்

உயர் சபைக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது!

அமிர்தசரஸ், ஜன. 4—

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சீக்கியர்களின் சபையான சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழுவின் முதற்கூட்டத்தில் ஒரே கலவரமும், குழப்பமும் நிலவியதாம்.

சீக்கியர்களின் உயர்தர மதக் குழுவிற்கு 25 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கக் கூட்டம் கூடியது.

இந்தத் தேர்தலுக்குப் பஞ்சாப் சர்க்காரின் உள்நாட்டிலாகா செயலாளரான எம். கே. கபூர் என்பவரும், தேர்தல் அதிகாரியாக இருந்த ஹூத்ரா என்பவரும்; கூட்டத்திற்கு தலைமை வகித்த மாஸ்டர் தாரா சிங்கிடம், உறுப்பினர்கள் வாக்களிப்பதில் ஏராளமான தவறுகளைச் செய்துள்ளனர் என்று எடுத்துக் காட்டினார்களாம்.

ஒருசமயம், அகாலி தளத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், வாக்களிக்கும் கடைசி நேரமான மாலை 5 மணிக்குப் பின்னரும் கட்டாயமாக உள்ளே நுழைந்து வாக்களிக்க முயன்றார்களாம். இதனால் எதிர் கோஷ்டிகளுக்கிடையே கைகலப்பு ஏற்பட்டதாம். கூட்டத்தில் ஒரே குழப்பம் நிலவியதாம். இச்சமயத்தில் தோழர்கள் கபூர், ஹூத்ரா ஆகிய இருவரும் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

இன்றைய வாக்கெடுப்பு செல்லாது என்று அவர்கள் அறிவித்தனர்.

சிறிது நேரம் சென்ற பின்னர் தோழர் கபூர், மாஸ்டர் தாராசிங்கிடம் மீண்டும் புதிய தேர்தலை இத்திங்கள் 6-ந் தேதி நடத்தலாம் என்று கூறினார்.

அதன் பின்னர், குழப்பத்துக்கிடையே கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது என்று தெரிகிறது.

உணவுப் பொருள்கள் வாணிபம்

பிரிட்டிஷ் தொழிற் கட்சி திட்டம்

"மீண்டும் பங்கீட்டை அமுல் செய்யாமல், போதுமான இறக்குமதியுடன் சர்க்காரே உணவுப் பொருள்களை வாங்கி பிரிட்டிஷ் மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைக்கத் திட்டமிடுவோம்,"

என்று பிரிட்டிஷ் தொழிற் கட்சி அறிக்கை ஒன்று கூறுகிறது.

அடுத்து தாங்கள் சர்க்காரின் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் உணவுப் பொருள்கள் விற்பனையில் தாங்கள் செய்யப்போகும் மாறுதலைப் பற்றி அந்த அறிக்கையில் தொழிற் கட்சியினர் எடுத்துக் காட்டுகின்றனர்.

உற்பத்தியாளருக்குக் கொடுக்கப்படும் விலைக்கும்—வாங்குவோர் கொடுக்கும் விலைக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதாகவும், ஆகவே, இந்த இடைவெளியைக் குறைப்பதன் மூலம் நன்மை ஏற்படும் என்றும் பிரிட்டிஷ் தொழிற் கட்சியினர் கருதுகின்றனர்.

இப்போது பிரிட்டனில் பாலின் விலையைத் தவிர மற்றவைகளின் விலை அதிகமாக இருக்கிறதாம்.

உணவுப் பொருள்கள், கால்நடை, பால், முட்டை இவைகளுக்காக தொழிற் கட்சி சர்க்கார் மூன்று கமிஷன்களை நியமிப்பார்கள் என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

சர்க்காரே இறக்குமதியாகும் உணவுப் பொருள்களை வாங்கி, அவைகள் ஒழுங்கான முறையில் விற்பனையாக ஏற்பாடு செய்யுமென்று கூறப்பட்டிருக்கிறது.

"சுதந்திர ஜனநாயகத்திற்காகப் போராடுவேன்"

பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் பாஷானி எச்சரிக்கை

பம்பாய், ஜன. 4—

"எந்த நிபந்தனையின் பேரிலும் பாகிஸ்தானில் 'கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம்' ஏற்பட நான் சம்மதிக்கமாட்டேன்," என்று, கிழக்கு பாகிஸ்தான் அவாமி லீக் தலைவர் அப்துல் அமீத்கான் பாஷானி கூறினார்.

ஏழு மாதம் வெளிநாடுகளில் இருந்த பின்னர், அவர், இப்போது பாகிஸ்தான் திரும்ப நினைக்கிறார்.

தான் இதுவரை பூரண ஜனநாயகத்திற்காகவே உழைத்து வந்ததாகவும், இனிமேலும் அப்படியே போராடப் போவதாகவும் பாஷானி மேலும் கூறினார்.

எப்போது அவர் கிழக்குப் பாகிஸ்தான் போக உத்தேசித்திருக்கிறார் என்று கேட்டபோது, இந்தியாவிற்கு தான் சொந்தவேலையாக வந்திருப்பதாகவும், அந்த வேலை முடிந்த பின்னர்தான் பாகிஸ்தானுக்குப் போவதாகவும் கூறினார்.

பாகிஸ்தானில் நுழைய அவர் அனுமதிக்கப்படுவாரா என்றும், பாகிஸ்தானில் நுழைந்தும் அவர் கைது செய்யப்படுவார் என்று பாகிஸ்தான் அமைச்சர் இஸ்கந்தர் மிர்சா கூறியதுபற்றியும், அவரிடம் எடுத்துக் காட்டியபோது, அவர், தான் தனது வாழ்நாள் முழுமையும் மக்களுக்காக போரிட்டிருப்பதாகவும், தனக்கு இப்போது 69 வயதாகிறது என்றும், ஜெனரல் மிஸ்ரா விரும்பினால், தான் மீண்டும் மக்களின் சேவை என்ற புனித காரியத்திற்காக இரத்தம் சிந்தத் தயார் என்றும் குறிப்பிட்டார்.

1940-லிருந்தே 'உண்மை ஜனநாயகம் நாட்டிற்குத் தேவை,' என்று தான் போரிட்டதாகவும் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தபோது, கவர்னர்—ஜெனரல், நாட்டில் உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டவே இப்படிச் செய்வதாகக் கூறினார் என்றும், நிலைமையில் மாற்றம் ஏற்பட்டு பாகிஸ்தானில் சுதந்திர ஜனநாயகம் ஏற்படாது என்று தோன்றினால் தான் மீண்டும் போராடத் தயங்கமாட்டேன் என்றும் பாஷானி மேலும் கூறினார்.

கேலிச் சித்திரம் வரைந்ததற்கு....

1,50,000 பிராங்க் அபராதம்

பாரிஸ் நீதிமன்றம் கடந்த ஜன. 3-ந் தேதியன்று பிரெஞ்சு கம்யூனிஸ்டு பத்திரிகாசிரியர் ஒருவருக்கும், கேலிச் சித்திரக்காரர் ஒருவருக்கும் 1,50,000 பிராங்க் அபராதம் விதித்துள்ளது.

முன்னாள் பிரெஞ்சுப் பிரதமரான எம். ஜோசப் லெனியல் என்பவர், அமெரிக்க வெளிநாட்டிலாக்கா மந்திரி ஜான் பாஸ்டர் டல்லசுக்கு, பிரெஞ்சு இராணுவ வீரர் ஒருவருடைய இரத்தத்திலிருந்து ஒரு 'கிளாஸ்' தருவதாகச் சித்திரம் வரையப்பட்டு வெளிவந்திருந்ததாம்.

ஒரு ஞாயிறு செய்தித் தாளில் வெளிவந்த அந்தச் சித்திரம் பிரான்சின் முன்னாள் பிரதமரை புண்படுத்தியிருப்பதாக நீதிமன்றம் கருதி, ஆசிரியரான பர்மின் பெலிஸ்லியர் என்பவருக்கும், கேலிச் சித்திரக்காரரான லூசாவ் மிட்டில் பெர் என்பவருக்கும் மேற்கண்டவாறு அபராதம் விதித்தது.

வாக்குறுதி

சேலம் மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரியில் நீர் தேக்கத் திட்டமொன்றை நிறுவுவதால் பாதிக்கப்படுகின்றவர்களுக்கு சென்னை சர்க்கார் நஷ்டஈடு கொடுப்பதுடன், வேறு இடங்களில் அவர்கள் தங்கள் பயிர்த் தொழிலை நடத்துவதற்கென நிலங்களையும் சர்க்கார் ஜாரி செய்து தருமெனவும் சென்னை முதலமைச்சர் காமராசர், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டத்திற்கான அஸ்திவாரக் கல் நாட்டுகையில் கூறினார்.

மேலும், இவ்விஷயத்தைக் கவனித்துக் கொள்ளும்படி சேலம் மாவட்டக் கலெக்டரையும் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீடிக்க மறுப்பு

இம்மாதம் 14-ந் தேதியோடு முடிவுறவிருக்கின்ற அமெரிக்கா—இந்தியா விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தை மேலும் சில காலத்திற்கு நீடித்துவைக்கும்படி அமெரிக்கா இந்திய சர்க்காரைக் கேட்டதாகவும், அந்தக் கோரிக்கையை இந்திய சர்க்கார் ஏற்க மறுத்துவிட்டதாகவும் தெரிகிறது.

இந்திய—அமெரிக்க விமானப் போக்குவரத்து சம்மந்தமாக புதியதொரு ஒப்பந்தத்தைச் செய்ய முயற்சி எடுக்காவிட்டால் 14-ந் தேதிக்குப் பின்னர் இந்தியாவிலுள்ள இரண்டு அமெரிக்க விமானக் கம்பெனிகளும் மூடப்பட்டுவிடும் என்று தெரிகிறது.

எளிய நடையில் நூல்களைவெளியிடவும்

முதியோர் கல்வி பரவ பண்டித நேரு யோசனை

அகமதாபாத், ஜன. 6—

"பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்டதுடன், எளிய முறையில் எழுதப்பட்டதுமான சிறு சிறு நூல்களை ஏராளமாக வெளியிட வேண்டும். முதியவர்களுக்காக இதுபோன்ற புத்தகங்கள் வெளியிடப்பட்டால் முதியோர் கல்வியினால் நல்ல பயன் ஏற்படும்," என்று பண்டித நேரு குறிப்பிட்டார்.

முதியோர் கல்வித் திட்டம் நடைபெற்று முடிந்த பின்னர், முதியோர்கள், தாங்கள் கற்றதை மறந்துவிடுகிறார்கள் என்று தெரிய வருகிறது என்பதைப் பண்டித நேரு மேலும் எடுத்துக்காட்டினார்.

முதியோரின் நலனுக்காக எளிய மொழியில் மாத இதழ்கள் வெளியிட வேண்டும் என்றும், மக்களிடையே காணப்படும் எழுத்தறிவின்மையைப் போக்காவிடில், நாட்டில் முன்னேற்றம் ஏற்படாது என்றும் நேரு தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

குஜராத் வித்யாபீட நூல் நிலையம் ஒன்றைத் திறந்துவைக்கையில் பண்டித நேரு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலமானார்

கொத்தமங்கலத்தைச் சேர்ந்த பழம்பெரும் காங்கிரஸ் தியாகியான எஸ். ஆர். வி. நல்லையா 2—1—55-ல் இயற்கையெய்தினார்.

இவர், காந்தியாரின் கொள்கைகளை வழுவாது பின்பற்றி, அவரது கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்புவதிலும், 1942-ல் நடைபெற்ற ஆகஸ்டுப் புரட்சியிலும் ஈடுபட்டு சிறை சென்று இன்னல் பலவற்றிற்கும் ஆளாகி, இறுதியில் தியாகி நிலம் 5 ஏக்கர் வழங்கப்பட்டார்; ஆனால், தமது பொதுநலத் தொண்டின் காரணமாக தமது சொத்துக்களுடன் தியாகி நிலத்தையும் இழந்து, இறுதியில், இறந்தினை செலவுக்குக் கூடப் பொருள் இல்லாமல் உயிர் துறந்தார்.

தமிழ் — சிங்களம் போதனா மொழிகளாக்கப்படுகின்றன

இரு மொழிகளையும் மூன்று ஆண்டுகளுக்குள் அறிந்துகொள்ள அதிகாரிகளுக்குக் கட்டளை

ஆரம்பப் பள்ளியிலிருந்தே ஆங்கிலம் கற்க ஏற்பாடு

மொழி சிக்கல்: இலங்கை பரிகாரம்

இலங்கையிலுள்ள உயர்தர இடைநிலைப்பள்ளிகளிலெல்லாம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரண்டு பாடங்கள் நீங்கலாக உள்ள மற்ற எல்லா பாடங்களையும் 1957-ம் ஆண்டு இறுதிக்குள் தமிழ், சிங்கள மொழிகளில் பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்வதென இலங்கை சர்க்கார் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சர்க்காரின் இம்முடிவை அமுல் நடத்தவும், ஆங்கில மொழிக்குப் பதிலாக சர்க்கார் நிர்வாக அலுவல்களை எல்லாம் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் கவனித்துக் கொள்வதற்குத் 'துரிதமான' ஏற்பாடுகள் செய்வதற்காகவும் அமைச்சர்களடங்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த மூன்றாண்டு காலத்திற்குள் சர்க்கார் 'சர்வீசு'களில் நியமிக்கப்பட இருக்கின்றவர்கள் எல்லாரும் அவ்விரு மொழிகளையும் கற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இலங்கை சர்க்கார் நிபந்தனை ஒன்றை விடுக்க ஆலோசித்து வருகிறதாம்.

சர்க்கார் வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில், சிங்கள மொழியில் தகுதி பெற்ற புத்தகங்களை வெளியிடவும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், மற்றும் கல்வித் துறை சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுமெனவும் காணப்படுகிறது.

மேலும், ஆங்கில மொழிப் பாடத்தை 3-வது வகுப்பிலிருந்தே போதிக்க வற்புறுத்தப்படுமாம்!

இலங்கை மந்திரி சபையில் சிங்கள மொழி சம்பந்தமாகப் பிளவுகள் ஏற்படக்கூடும் எனக் கருதப்பட்டுவந்த ஒரு நிலைமை இந்த அறிக்கை மூலம் தீர்ந்துவிட்டது எனவும் கூறப்படுகிறது

அனுமதி மறுப்பிற்குக் காரணமென்ன?

அமெரிக்காவின் விசித்திர போக்கு

இந்தியாவிற்கு அனுப்பப்பட வேண்டிய மூன்று போக்குவரத்து விமானங்களுக்கு ஏற்றுமதி அனுமதி (லைசென்ஸ்) கொடுக்க அமெரிக்க வர்த்தக இலாகா மறுத்து வருகிறதாகக் கூறப்படுகிறது.

செஞ்சீனாவுடன் இந்தியா விமானப் போக்குவரத்தை ஆரம்பிக்கும் என்று அமெரிக்க சர்க்கார் கருதுவதே இந்த அனுமதி மறுப்புக்குக் காரணமாம்.

சென்ற ஆண்டில் (1953) இந்தியா, 3 போக்குவரத்து விமானங்களுக்கு (சூப்பர் கான்ஸ்டலேஷன் விமானங்கள்) அமெரிக்காவிடம் 'ஆர்டர்' கொடுத்திருந்தது. அதன்படி, ஒரு விமானம் கடந்த செவ்வாய்க் கிழமையன்றே இந்தியாவிற்கு வந்திருக்க வேண்டும்.

"இந்திய சர்க்கார், அமெரிக்காவுடன் செய்துள்ள விமானப் போக்கு-வரத்து ஒப்பந்தத்தை நீடிக்க மறுப்பதால்தான், இந்த அனுமதியை வழங்க அமெரிக்க சாக்கார் மறுத்து வருகிறது," என்று கூறப்பட்டதற்கு, அமெரிக்க அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனராம்.

'ஊருக்குபதேசம் உனக்கில்லையடி!'

"ஆக்கிரமிப்புகள் எவையும், கருதிய பலன் கொடுக்காது என்பதைக் கம்யூனிஸ்டுகள் உணரச் செய்ய அமெரிக்காவும், கம்யூனிஸ்டுகளல்லாத பிற நாடுகளும் தங்கள் தங்கள் இராணுவ பலத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும்; அணுகுண்டு யுத்தங்கள் நடைபெறாமல் தடுக்க இது ஒன்றுதான் வழியாகும்.

"ஆக்கிரமிப்பு வந்தால் அமெரிக்கா, துரிதமாகவும், மிகக் கடுமையாகவும் பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதை கம்யூனிஸ்டுகள் உணர்ந்து கொண்டால் அவர்கள் ஆக்கிரமிப்பில் இறங்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்."

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் அறிவித்திருக்கிறார்.

* * *

கேட்டுக்கொள்ளப் போகிறாராம்!

அமெரிக்க இராணுவத்தினர் தொகையை சுமார் 30 லட்சம் பேராகக் குறைத்துவிடவேண்டுமென அமெரிக்க காங்கிரசைக் கேட்டுக்கொள்ளப் போவதாக ஐசன்ஹோவர் தெரிவித்திருக்கிறார்.

தற்போது அமெரிக்காவிலுள்ள இராணுவத்தினர் தொகை 31,68,000 ஆக இருக்கிறது.

அச்சத்தின் எதிரொலியா?

அமெரிக்காவை எதிரிகள் தாக்குவதாயிருக்கின்ற நேரத்தில், எந்தெந்த விதங்களில் அத்தாக்குதல்களை முறியடிக்க வேண்டும் என்பதுபற்றிய பயிற்சியை, அமெரிக்க 'ரிசர்வ் படை'யினருக்கு விமான இலாகாவினர் அளிப்பர் என கூறப்படுகிறது.

அமெரிக்காவிலுள்ள சுமார் 3½ லட்சம் 'ரிசர்வ்' படையினரில் 1,14,000 பேருக்கு ஏற்கனவே அவரவர் பொறுப்புகள் இன்னின்ன என்று வரையறுக்கப்பட்டுவிட்டதாம்.

'அணுகுண்டு யுத்தம் நேருகின்றபோது, அமெரிக்காமீது முதலில் அணுகுண்டு விழுந்த பிறகு இம்மாதிரியான ஏற்பாடுகளையெல்லாம் கவனித்துக் கொள்வதற்குப் போதிய வாய்ப்புக்கள் கிடைக்காமல் போய்விடுமாதலால்தான், இப்போதே அதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்' என்று அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறுகின்றனராம்.

பிரிட்டனின் கிலி?

இந்தியாவில் எஃகு ஆலை அமைப்பின் எதிரொலி

பிரிட்டனின் உதவி வர்த்தக அமைச்சர் லோ பிரபு, புதுடில்லியில், இந்திய சர்க்கார் உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டியைச் சந்தித்து, இந்தியாவில் பிரிட்டனின் உதவியுடன் எஃகு ஆலை அமைப்பது பற்றிப் பொதுப்படையாகப் பேசியிருக்கிறார். அப்பேச்சுவார்த்தை மேலும் தொடர்ந்து நடைபெறக்கூடும்.

ரஷ்யாவைப் பற்றிய அச்சத்தின் காரணமாகத்தான், பிரிட்டன், இந்தியாவில் தனது உதவியுடன் ஒரு எஃகு ஆலை நிறுவ முன்வந்திருக்கிறது என்று பிரிட்டனிலுள்ள பல பத்திரிகைகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றனவாம்.

இந்தியாவின் தொழில் வளர்ச்சித் திட்டங்களில் ரஷ்யா ஒரு ஊன்றுகோல் போன்ற நிலையை அடைந்து விடக்கூடாது என்ற எண்ணம் பிரிட்டனிடம் இருந்து வருகிறது என்று அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுவிட்டு, 'காமன்வெல்த்'தின் பொருளாதார எல்லைக்கு வெளியில் இந்தியா சென்றுவிடாமல் இருக்கப் பார்த்துக் கொள்வதற்காகத்தான் பிரிட்டனின் உதவி வர்த்தக அமைச்சர் இந்தியா சென்றிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கின்றனவாம்.

திராவிடர் திருநாள்

சென்னை சர்க்கார் விழா கொண்டாடுகிறது

சென்னை, ஜன. 7—

தைத் திருநாளாகிய பொங்கல் விடுமுறையின்போது சென்னை சர்க்கார், சென்னை மாநிலமெங்கும் 'விவசாய வாரம்' கொண்டாட முடிவு செய்திருக்கிறது.

இச்செய்தியை சென்னை சர்க்கார் விவசாய இலாகா அமைச்சர் பக்தவத்சலம் அறிக்கை ஒன்றில் கூறுகிறார்.

இவ்விழாவை ஒட்டி, ஜன. 19-ந் தேதியன்று, திருவள்ளூரில் மாபெரும் பொதுக்கூட்டமொன்று நடைபெறுமென்றும், அப்பொதுக் கூட்டத்தில் இந்திய சர்க்கார் அமைச்சர்கள் சிலரும் கலந்துகொள்வார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாய வாரக் கொண்டாட்டம் மாவட்டங்கள் அனைத்திலும் நடைபெறுமென்றும் தெரிகிறது.

பொங்கற் புது நாளில் மகிழ்ச்சியுடன் இருக்கும் விவசாயிகள் இந்த விழாவில் கலந்துகொண்டு தங்களிடையே நிலவும் பிரச்சினைகள் பற்றி விவாதித்துப் பயன் அடைவார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கின்றனர்.

இந்த விழாவினை ஒட்டி கால் நடைக் காட்சிகள் நடத்தப்படும் என்றும் தெரிகிறது.

சென்னையைச் சுற்றியுள்ள சிறந்த விவசாயப் பண்ணைகளை திருவள்ளூரில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ள வரும் விவசாயிகள் சென்று பார்க்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று தெரிகிறது.

திரைப் படக் காட்சி ஒன்றும் காட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமாம்.

விவசாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தவே இந்த விழாவை ஒரு வாரம் கொண்டாட சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

இந்த விழா இந்திய சர்க்கார் விவசாய இலாகா அமைச்சரின் யோசனையின் பேரில் நடத்தப்படுகிறது.

விரும்பத்தகாதவராம்!

புதுடில்லி, ஜன. 6—

நைரோபியில் (கெனியா) பிரபல வக்கீலாக இருக்கும் ஜஸ்வந்த் சிங் என்பவர் 'விரும்பத்தகாதவர்' என்று கெனிய சர்க்கார் அறிவித்திருப்பதோடு, அவர் இனிமேல் கெனியாவின் எல்லைக்குள் நுழையக்கூடாதெனவும் அவருக்குத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கெனியா தலைவரான கென்யாட்டாமீது நடைபெற்ற வழக்கொன்றின்போது டி. என். பிரிட், திவான் சமன்லால் ஆகிய இரண்டு வக்கீல்களுக்கும் இவர் உதவியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கழகக் கூட்டம்

★

வேலூர் (டவுன்)
9—1—55 ஞாயிறு மாலை
தலைவர்: மா. பா. சாரதி
பேசுவோர்:
கேசவன்
ரசீத்
மணிஎழிலன்

சென்னை 18-வது வட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்கட்கு

9-1-55 காலை 9 மணிக்கு, சென்னை 18-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது நான்காம் ஆண்டு விழா, கழக வரவு-செலவு பரிசீலனை, பொங்கல் விழா கொண்டாடுவது, மாவட்டக் கழகம் நடத்தும் நாடகப் போட்டியில் கலந்துகொள்வது ஆகியவை பற்றி முடிவெடுக்கப்படும்.

சென்னை 25-வதுவட்ட தி.மு.க. செயற் குழு உறுப்பினர்கட்கு

9-1-55 பிற்பகல் 2 மணிக்கு, சென்னை 25-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், தோழர் ஒ. பா. வளர்மதி இல்லத்தில் நடைபெறும்.

அரசியல் வகுப்பு

9-1-55 காலை 9 மணிக்கு, சென்னை 42-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (4, [illegible] முதலி தெரு. திருவல்லிக்கேணி) தோழர் நீல. நாராயணன் தலைமையில் 'உலகத் தோற்றவாய்' என்பதிலிருந்து தோழர் அன்பரசு அரசியல் வகுப்பு நடத்தி வைப்பார்.

கண்ணதாசன்

நிகழ்ச்சிகள்

ஜன. 8, 9: மதுரை மாநாடுகள்
10: திருவல்லிக்கேணி (நபிகள் கூட்டம்)
13: சிந்தாதிரிப்பேட்டை (நாடகம்)
14: சென்னை மாவட்ட பொங்கல் விழா
16: காலை: திருவொற்றியூர் மாலை: ஆலந்தூர்

சொந்த மாளிகையை பிர்லா நன்கொடையளித்தார்

தொழில் பொருட்காட்சிசாலை அமைக்கப்படும்

கல்கத்தாவில் 'பிர்லா பாக்' என்ற பெயரில் உள்ள தனது மாளிகை ஒன்றை இந்தியத் தொழில் அதிபரான ஜி.டி. பிர்லா, காட்சி சாலை ஒன்றுக்காக இந்திய சர்க்காருக்கு நன்கொடையாக அளித்திருக்கிறார்.

இந்த மாளிகையில் 'தொழில் பொருட் காட்சி சாலை' ஒன்றை அமைக்க வேண்டுமென்பது பிர்லாவின் விருப்பமாகும்.

இந்த அன்பளிப்பை இந்திய சர்க்காரின் சார்பில் கல்வி அமைச்சர் மௌலானா அபுல்கலாம் ஆசாத் ஏற்றுக்கொண்டார்.

இந்த மாளிகையில் காட்சி சாலை அமைப்பது பற்றி ஆவன செய்யவும், யோசனைகளைக் கூறவும் குழு ஒன்று நியமிப்பதென்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

இந்தியாவில் இதுபோன்ற காட்சிசாலை ஒன்றும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"35 ஆண்டு காலமாக குடும்பத்துடன் வாழ்ந்த மாளிகையை பிர்லா நன்கொடையாக அளித்திருப்பது பாராட்டத்தக்கது," என்று மௌலானா ஆசாத், பிர்லாவுக்கு எழுதியுள்ள நன்றியறிதல் கடிதத்தில் கூறியுள்ளார்.

ரயில்வே வகுப்புகளுக்கு…

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம் மிகப் பழையனவாகிவிட்ட வாகன்களுக்குப் பதிலாக உபயோகிக்கப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், 1,500—3,000 மைல்கள் வரை புதிய இரயில் பாதைகள் அமைக்க தற்காலிகமாகத் திட்டமிடப்பட்டுள்ளதாம்.

"பகை நாடு" என்ற உறவு நிலையை மாற்றி ரஷியாவுடன் சுமூக உறவு ஏற்படுத்திக்கொள்ள ஜப்பான் உத்தேசித்திருக்கிறது.

சர்க்காரை சாடுகிறார் சனாதனி!

திருநெல்வேலியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் இந்து மகாசபைத் தலைவர் என். சி. சாட்டர்ஜி, தமிழ் நாட்டில் இந்து மதம் கண்டிக்கப்படுவதையும், இராமன், கிருஷ்ணன், சீதை போன்ற விஷ்ணு — லட்சுமியின் அவதாரங்கள் இழிவு படுத்தப்படுவதையும் கண்டு, தான் திடுக்கிட்டதாகக் கூறினார்.

"மதச் சீர்திருத்தம், மறுமலர்ச்சி என்ற பெயரில் நடைபெறும் இதுபோன்ற அவதூறு செய்யும் காரியங்களைப் பார்த்துக்கொண்டு சர்க்கார் சோம்பேறித்தனமான — பார்வையாளராக இருக்கிறது,"

என்று அவர் சர்க்கார் மீது குற்றம் சாட்டினாராம்.

மின்சார ஊழியர்கள் வேலை நிறுத்த நிலைமை

4000 பேர் வேலைக்குத் திரும்பினராம்!

பெங்களூரில், வேலை நிறுத்தத்தை மேற்கொண்டுள்ள 12,100 மின்சாரத் தொழிலாளர்களில் 4000 பேர் வேலைக்குத் திரும்பி வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்த 4000 தொழிலாளர்களை வைத்துக்கொண்டே நாங்கள் மின்சார வினியோகத்தைச் 'சமாளித்து' விடுவோம் என்று மேற்படி இலாகா அதிகாரிகள் சிலர் கூறியிருக்கின்றனராம்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக மைசூர் மாநிலமெங்குமுள்ள மின்சார அபிவிருத்தி வேலைகளும் பராமரிப்பு வேலைகளும் தடைப்பட்டு விட்டன என்று மாநில மின்சார பிரதம எஞ்சினீயர் அறிவித்திருக்கிறார்.

தென்கன்னடத்துக்குத் தற்போது போடப்பட்டு வருகின்ற மின்சார 'லைன்' வேலையும் பாதிக்கப்பட்டு விட்டதுடன், மின்சார இலாகா 'பட்ஜெட்' நிலைமையும் கூட பாதிக்கப்பட்டு விடலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நகர சுகாதார திட்டங்கள்

மேலும் 6 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, ஜன. 6—

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், நகரங்களில் தண்ணீர் வினியோகம், சாக்கடைத் திட்டங்கள் முதலியனவற்றை அமுல் செய்வதற்காக இந்திய சர்க்கார் சுகாதார இலாகா மேலும் 6 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறதாம்.

ஏற்கனவே, இத் திட்டங்களுக்காக ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில சர்க்கார்களிடமிருந்து கிடைத்துள்ள திட்டங்களையெல்லாம் சுகாதார இலாகா பரிசீலித்து வருவதாகவும், சுகாதார திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மொத்தம் 2 கோடி ரூபாய்களையும் மாநில சர்க்கார்களுக்குக் கடனாக அளிக்கப் பயன்படுத்தப்படுமெனவும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,

கடமையாற்றுவீர்-கைத்தறி விற்பனை செய்வீர்!